

FREE EDITION

February - 2019

# ஜோதி

**Jothi Spiritual Newsletter**

ஜோதி 12 : சுடர் 12 -144

ஆன்மிகச் செய்திச்சுடர்

## மூல மந்திரம்

ஓம் சக்தியே பராசக்தியே!
ஓம் சக்தியே ஆதி பராசக்தியே!
ஓம் சக்தியே மருவூர் அரசியே!
ஓம் சக்தியே ஓம் விநாயகா!
ஓம் சக்தியே ஓம் காமாட்சியே!
ஓம் சக்தியே ஓம் பங்காரு காமாட்சியே!
*

ஓம் சக்தி!

அன்னை ஆதிபராசக்தி அவதாரம்
ஆன்மிககுரு
**பங்காரு அடிகளார்**
அவர்களின்
**மனிதநேய – ஆன்மிக சேவையை**
இந்திய மத்திய அரசால்
பாராட்டப்பெற்று
2018ஆம் ஆண்டிற்கான இந்தியாவின்
தேசிய உயர் விருதுகளின் ஒன்றான
**பத்மஸ்ரீ விருதினை**
பெறும் நம்
ஆன்மிககுரு
**அருள்திரு அம்மா**
**பங்காரு அடிகளார்**
அவர்களை
**வணங்கி மகிழ்கிறோம்.**

**செவ்வாடைத் தொண்டர்கள்**



# சூடான கலச தீர்த்தம்

### திண்டுக்கல் மாவட்டம்: ஆர்.வெள்ளோடு:

திண்டுக்கல் மாவட்டம் ஆர்.வெள்ளோடு என்ற கிராமத்தில் ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம் இயங்கி வருகிறது. சக்தி குமரேசன் அந்த மன்றத்தின் தலைவர். ஒரு முறை அந்த மன்றத்தில் வேள்வி செய்யத் திட்டமிட்டிருந்தனர். என்னையும் வேள்விக்கு அழைத்தனர். அன்னையின் பெருமைகளை ஆங்காங்கு பிரச்சாரம் செய்வதுடன், வேள்வித் தொண்டனாகவும் இருப்பதனால், அந்த மன்றத்துக்குச் சென்றேன். வேள்விக்கு முதல் நாள் மழை பெய்தது. அன்று மாலை முதல் பிரச்சாரம் இல்லை. ஆதலில் முதல்நாள் யாக குண்டங்கள், சக்கரங்கள் அமைக்க முடியவில்லை. வேள்வியன்று காலைதான் யாக குண்டம், சக்கரம் அமைத்து, மதியம் 12.30 மணிக்கு வேள்வி தொடங்கினோம்.

### மாட்டு வண்டியில் கொண்டுவரப்பட்ட பெண்மணி:

அந்த வேள்விப் பூசையில் கலச அர்ச்சனையில் கலந்து கொள்வதற்காக மாட்டு வண்டியில் ஒரு பெண்மணி அழைத்து வரப்பட்டார். அவரால் கால்கள் ஊன்றி நடக்க முடியவில்லை. இருவர் கைத்தாங்கலாகப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்தனர். உடல் வாடி மெலிந்து காணப்பட்டார். கடுமையான நோயால் பாதிக்கப்பட்டவர் போல் தெரிந்தது. அவரைத் தூக்கி வந்து கலசம் ஒன்றின் எதிரே உட்கார வைத்தார்கள்.

முனைவர் சி.ஏ.முத்துக்கிருஷ்ணன்,M.A., B.O.L., Ph.D.,
கோவை

### அன்னைக்கு அபிடேகம்:

வேள்விப்பூசை முடிந்தவுடன், வேள்வியில் வைக்கப்பட்ட கலசத் தீர்த்தத்தை அம்மா படத்தின் மீது தெளிப்பது மரபு. அதுதான் அன்னைக்கு அபிடேகம்! கலசங்களுக்கு யார் யார் அர்ச்சனை செய்தார்களோ, அவர்களின் கைகளில் கலசங்களை எடுத்துக் கொடுத்தோம். மூன்று முறை யாகசாலையைச் சுற்றி வந்து அவர்கள் அன்னைக்கு அபிடேகம் செய்ய வேண்டும். அந்த நோயாளிப் பெண்மணியை, ஆடவர் ஒருவர் கைத்தாங்கலாகப் பிடித்துக்கொண்டு யாகசாலையை மூன்றுமுறை வலம்வரச் செய்தார்.

### சூடான கலச தீர்த்தம்:

அன்னைக்கு அபிடேகம் நடக்கும்போது படத்திற்கு இரண்டு புறமும் இருவர் நிற்க வேண்டும். நானும், திண்டுக்கல் மாவட்டச் செயலாளர் சக்தி கணேசனும் அவ்வாறு நின்றோம்.

(தொடர்ச்சி 2ஆம் பக்கம்)

அன்னையின் அருள்வாக்கு:

**ஆன்ம முன்னேற்றம் பெற..**
**“உள்ளத்தில் போட்டி பொறாமை உணர்வுகளைக் களைந்தால்தான் ஆன்மிகத்தில் முன்னேற்றம் அடையலாம்”**

## "ஜோதி"

- ஆன்மிக செய்திச்சுடர்

ஜோதியில் வெளிவரும் ஆக்கங்கள் மூலக்கருப் பொருளான ஆன்மிககுரு அருள்திரு அம்மா உலகுக்குத் தந்த இலகுவழி ஆன்மிகம், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி அறநிலையின் வெளியீடான 'சக்தி ஒளி' மற்றும் ஆலயம் சார்ந்த ஆக்கங்கள், சக்திகளின் அனுபவங்கள் என பல்வேறு ஆக்கங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.

மேற்படி ஆக்கங்கள் தொகுக்கப்பட்டு இலகு வழியாக மக்களிடம் சென்று அடையும் பொருட்டும், அம்மாவின் ஆன்மிகத்தை மக்களிடையே பிரச்சாரம் செய்யும் வகையிலும் சிறு தொண்டாகவே மேற்கொள்ளப்படுகிறது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகிறோம்.

முகநூல்(Facebook) சமூக வலைய இணையத்தளத்தினுடாக "ஜோதி" ஆன்மிகச் செய்திச்சுடர் மாத இதழை தரவிறக்கம் செய்யலாம்.

**Search by: "Jothi Sudar"**

## செய்திச்சுடரில்...


**சூடான கலச தீர்த்தம்**
Page: 1 – 3

**UPCOMING EVENTS**
Melbourne: 5, 7
Sydney: 8, 9

**திருமதி அம்மா பதில்கள்**
பக்கம்: 6

**Divine Miracles**
Page: 4

**சித்தர்பீட விழாக்கள்**
பக்கம்: 15

**ஆன்மிக நாட்குறிப்பு**
பக்கம்: 16

**கண்டதும் கேட்டதும்...**
பக்கம்: 8 - 15


## சூடான கலச தீர்த்தம்...

(1ஆம் பக்க தொடர்ச்சி)

யாகசாலையைச் சுற்றிக் கலசம் ஏந்தி வருபவர்கள் கையிலிருந்து கலசத்தை வாங்கி, சக்தி கணேசன் கையில் கலசத்தீர்த்தத்தை நான் ஊற்ற, அவர் அம்மா படத்துக்கு அதைக்கொண்டு அபிடேகம் செய்தார்.

அந்த நோயாளிப் பெண்மணியின் கலசத்தை வாங்கி, அதில் உள்ள தீர்த்தத்தைக் கணேசன் கையில் ஊற்றினேன். அதனை வாங்கிய அவர் நடுங்கியபடி "அண்ணே! தீர்த்தம் சூடாக இருக்குது அண்ணே!" என்றார். அதையே அபிடேகம் செய்தோம்.

அந்தப் பெண்மணியை அழைத்து வந்தவர் கேட்டார்.

"ஏங்க? அபிடேகம் செய்யும்போது தீர்த்தம் சூடாக இருக்குன்னு சொன்னாரே.. அதனால் கெடுதல் ஏதாவது வருங்களா..?"

"எதுவும் வராது. அம்மா சொன்ன விதிமுறைப்படி வேள்வி செய்திருக்கிறோம். அவள் மந்திரங்களின் சக்தி கலசத்தில் வந்து நிறையும்போது அந்தக் கலசத் தீர்த்தத்திற்கு மகிமை உண்டு. ஆகவே எல்லாம் நன்மைக்கே! தீர்த்தம் சூடாக இருப்பது உண்மைதான். அதனால் கெடுதல் நடக்கும் என்று அர்த்தமல்ல. எல்லாவற்றுக்கும் நீங்களும் அன்னை ஆதிபராசக்தியை வேண்டிக்கொள்ளுங்கள்" என்றேன்.

அந்தப் பெண்மணியை மாட்டு வண்டியில் ஏற்றிக்கொண்டு அவர்கள் புறப்பட்டுப் போய்விட்டார்கள்.

### தேடி வந்த அன்பர்:

அந்த ஆண்டு ஜுலை மாதம் கடைசி வாரம், ஒரு நாள்...

நான் எங்கள் கல்லூரியில் எங்கள் தமிழ்த்துறைப் பேராசிரியர் அறையில் உட்கார்ந்திருந்தேன். அப்போது ஓர் அன்பர் யாரையோ தேடிக்கொண்டு அறைக்குள் வந்து பார்த்தார். அது மாணவர்கள் கல்லூரியில் சேர்க்கைக்கான சமயம். அது விஷயமாகப் பெற்றோர்கள் வருவதும் போவதுமாக இருப்பார்கள் "நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள்?" என்று விசாரித்தேன். "அடடே! நீங்களா? உங்களைத்தான் பார்க்க வந்தேன் சக்தி!" என்றார். "சக்தி!" என்று அவர் குறிப்பிட்டதும் இவர் ஆதிபராசக்தி ஆன்மிக இயக்கத்தைச் சேர்ந்தவர் என்று அறிந்துகொண்டு, "உட்காருங்கள்" என்று எதிரேயிருந்த நாற்காலியைக் காட்டினேன். "என்ன விஷயம்? சொல்லுங்கள்"என்றேன்.

### அந்த அன்பர் சொன்ன விவரங்கள்:

"சக்தி! என் பெயர் கஸ்தூரி நாயுடு. மூன்று மாதங்களுக்கு முன்பு என் தங்கைக்கு உடல் நலம் கெட்டது. ஆர். வேள்ளோடு வேள்விக்கு அழைத்து வந்தேன். நினைவிருக்கிறதா? அம்மாவுக்கு அபிஷேகம் நடந்தபோது கலச தீர்த்தம் சூடாக இருந்ததே..? அது என் தங்கை அர்ச்சனை செய்த கலச தீர்த்தம்தான். அந்த மன்றத் தலைவர் குமரேசன் என் உறவினர்தான். என் தங்கை ஒரு நோயாளி. அது விஷயமாக உங்களைப் பார்க்கச் சொன்னார்".

### மனைவியுடன் வாழ மறுத்த கணவன்:

கஸ்தூரி நாயுடு மேலும் சொன்னார் -
"என் தங்கைக்குத் திருமணம் நடந்து ஒரு குழந்தையும் இருக்கிறது. நன்றாகத்தான் இருந்தாள்.

(தொடர்ச்சி...3ஆம் பக்கம்)

## சூடான கலச தீர்த்தம்...

(2ஆம் பக்க தொடர்ச்சி)

ஒருநாள் திடீரென்று பேச்சு வரவில்லை. வாயிலிருந்து எச்சில் ஒழுகியபடி இருந்தது. எதுவும் சாப்பிட முடியவில்லை. பசி இல்லை. கொஞ்ச நாள் கழித்து ஆட்கள் யாரையும் அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. குழந்தையை எடுத்துப் பால் கொடுக்கவும் மறந்தாள். பைத்தியம் பிடித்தவள் போல ஆகிவிட்டாள். நோயாளித் தங்கையை என் தலையில் கட்டிவிட்டீர்களே..! என்று சொல்லி அவளையும், குழந்தையையும் என் வீட்டில் கொண்டு வந்து விட்டுவிட்டு அவள் கணவர் போய் விட்டார்.

### வேள்விப்பூசையில் கலந்து கொள்ளுங்கள்:

"ஆர்.வெள்ளோடு ஆதிபராசக்தி மன்றத் தலைவர் குமரேசன், மன்ற விழாவுக்கு நன்கொடை வசூலிக்க என் வீட்டுக்கு வந்தார். "எந்த சாமியும் என் தங்கையின் உடம்பைக் குணமாக்கவில்லை. நாளுக்கு நாள் இவள் உடம்பு மோசமாகி வருகிறது. இந்த சாமிக்கு நன்கொடை கொடுத்தால் மட்டும் சரியாகப் போய்விடுமா என்ன?" என்று சொல்லி அலுத்துக் கொண்டேன்."

எங்கள் மன்றத்தில் யாகபூசை நடக்க இருக்கிறது. உங்கள் தங்கையை அந்தப் பூசையில் கலந்துகொள்ளச் செய்யுங்கள். அதனால் பலன் ஏற்படலாம். அந்த மேல்மருவத்தூர் தாய் எத்தனையோ அற்புதங்களை நடத்தி வருகிறாள். உங்கள் தங்கையையும் ஒருவேளை குணப்படுத்தலாம். நம்பிக்கையோடு அவரை யாக பூஜைக்கு அழைத்து வாருங்கள்" என்றார் குமரேசன்.

"அவர் சொன்னதால் ஒரு சபலம் ஏற்பட்டு மாட்டு வண்டியில் வைத்து தங்கையை அழைத்து வந்தேன்".

"அவள் அர்ச்சனை செய்த கலச தீர்த்தம் சூடாக இருந்தது. நீங்களும் அதைக் கொண்டு அம்மனுக்கு அபிஷேகம் பண்ண வைத்தீர்கள். யாக பூஜை முடிந்து என தங்கையை வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வந்தேன்".

"அதன்பிறகு அதிசயமாக என் மனைவியைப் பார்த்து "எனக்குப் பசிக்கிறது!" என்றாள். சுயநினைவு இன்றி எதுவும் பேசாமல் இருந்தவள் பசிக்கிறது என்கிறாளே என்று ஆச்சரியம் அடைந்தேன். வியாதி வந்ததிலிருந்து எட்டு மாதமாகத் திட ஆகாரம் எதுவும் சாப்பிட்டதில்லை. அன்று மதியம் சமைத்த சாதத்தைக் கொண்டு வந்து போட்டாள் என் மனைவி. அவளே எடுத்துச் சாப்பிட்டாள். கையைக்கூடக் கழுவாமல் அப்படியே சாய்ந்து தூங்கிவிட்டாள். அடுத்த நாள் மாலை வரை ஆழ்ந்த உறக்கம்."

"மறுநாள் மாலை எழுந்தாள். உறவினர்களை அடையாளம் தெரிந்து கொண்டாள்".

"என் குழந்தை எங்கே? என்று விசாரித்தாள். குழந்தையை வாங்கிப் பால் கொடுத்தாள். என் கணவர் எங்கே? என்று கேட்டாள்".

"பழையபடி நல்ல நிலைமைக்கு வந்துவிட்டாள். அந்த யாக பூஜையில் கலந்துகொண்டு வந்ததிலிருந்துதான் இந்த மாற்றங்கள்!".

"ஒரு மாதம் சென்றது. அவளுக்கு நோயின் அறிகுறி எதுவும் இல்லை. அப்புறம் அவளை அழைத்துச்சென்று அவள் கணவன் வீட்டில் விட்டுவிட்டு வந்தேன். இப்போது என் தங்கை நல்லபடி இருக்கிறாள். கடிதமும் எனக்கு எழுதியிருக்கிறாள். பாருங்களேன்..!" எனச் சொல்லி அந்தக் கடிதத்தைக் காட்டினார் கஸ்தூரி நாயுடு.

"இந்தச் சந்தோசத்தை உங்களிடம் சொல்லிவிட்டுப் போகவே உங்களைத் தேடி வந்தேன்" என்றார்.

அம்மா அருளிய வேள்வியின் மகிமையை நினைத்தும், அதில் தொண்டு செய்ய எனக்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததை எண்ணியும் என் உள்ளம் இறும்பூது எய்தியது.

ஓம் சக்தி!

## அமாவாசை – பௌர்ணமி விளக்குப்பூசை பலன்கள்

**தை –அமாவாசை–பௌர்ணமி :**
வாழ்க்கையில் வெற்றி உண்டாகும். வாழ்க்கையில் எல்லா முயற்சிகளிலும் வெற்றி உண்டாகும்.

**மாசி – அமாவாசை–பௌர்ணமி :**
துன்பம் அகலும்.
செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கி தூய்மை அடையலாம்.
அதன்பிறகு மனமறிந்து எந்த பாவத்திலும் ஈடுபடாமல் இருக்கத் தோன்றும்.

# Divine Miracles at Melmaruvathur

## Do you want grace or wealth?:

Selvaraj was a post-graduate who was running a textile business at Valar Kumaralingam near Udumalaipet. A devotee of Vallalar since the age of 12 he practiced meditation. He was taking part in the activities of Adi Parasakthi Workship Centre as Vice-President. Suddenly he found that his business was affected adversely during the last three months. A lot of stock remained unsold causing misery. As Pongal approached his business suffered even more. He lost to his competitors and he lost his peace and sleep as well.

He then went to Maruvathur to seek Mother's blessings. With tears in his eyes he pleaded, "Mother, I seek refuge in You." Mother asked, "Son, why do you weep when I am with you? What is it that you seek when I have left no deficiencies in your life? Do you want grace or wealth?' He replied, "I have your grace. Otherwise how could I be sitting here in front of you? Now I need only wealth to carry on."

Mother said, "If you have wealth your relatives will make you go mad with their demands. But if you have my grace there will be people at your side. Now tell me if you still need wealth. If so, I shall give you wealth before you reach home. But later on, do not come running to me saying that you have got into difficulties due to that!"

Selvaraj replied, "Mother! You have opened my eyes today. I do not need anything more than your grace. You alone are my savior!" and left for his home with tears in his eyes. Mother told him as he left, "My son, I shall come to your house and bring about a great change in your life. Now go back."

When he returned home his problems resurfaced and he had to face the difficulties without complaining. On one Tuesday he opened his shop a bit earlier than usual, did Pooja, lighted camphor and went and sat on his chair. Just then an old woman of over sixty came to the shop and said, "Son! Please give me a saree!" He went to the back of the shop to get the saree.

When he returned he found her drawing a circle in front of the shop. He was shocked and asked her what she was doing. She replied, "Son! Listen to me! After closing the shop tonight, cut a lemon and throw the pieces and then dig up this place. This will remove the curse someone has placed on you."

Late that night, he cut a lemon into pieces scattering them in all directions and asked a servant to dig the spot indicated by the woman. When it was dug he found a lot of trash along with thirteen copper plates about an inch wide and six inches long. Some hair and bones were also taken out. The copper plates had some spells written on them. One new plate carried curses like, "Let Selvaraj die: his shop be ruined and let his family be destroyed etc." He was shocked. He then closed the pit after due ceremony and destroyed all the trash from the pit. He also realized how Mother had come to protect him as She had promised. He also realized that black magic and evil spells that he always dismissed as superstition, existed.

***

# Melbourne - Mandrams – Upcoming Events – February 2019

**Melmaruvathur Swayambu Arulmihu Athiparasakthi Vaara Valipaattu Mandram**
**மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றம்**
(Reg. No. 2193)
விக்டோரியா – அவுஸ்திரேலியா
P.O.Box: 5217, Clayton, Victoria 3168, Australia - Contacts / மன்ற தொடர்புகளுக்கு: 0433440194

**கூட்டு வழிபாடுகள்:**

**Clarinda – வெள்ளி - Friday:**

**Melaleuca Activity Hub,**
31 Melaleuca Drive
Clarinda 3169
(Mel.Ref.: 78 K 3)

**Dandenong - ஞாயிறு – Sunday:**

**Latham Crescent Centre**
Cnr of Latham Cr. & Deakin Cr.-
Dandenong3175
(Mel.Ref.: 90 C 01)

| | | | | |
|---|---|---|---|---|
| Clarinda - 01.02.2019 | Friday | தை | 18 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 03.02.2019 | Sunday | தை | 20 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 08.02.2019 | Friday | தை | 25 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 10.02.2019 | Sunday | தை | 27 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 15.02.2019 | Friday | மாசி | 03 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 17.02.2019 | Sunday | மாசி | 05 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |
| Clarinda - 22.02.2019 | Friday | மாசி | 10 | Joint Prayer – கூட்டு வழிபாடு – 7.30p.m. – 9.00p.m. |
| Dandenong - 24.02.2019 | Sunday | மாசி | 12 | Joint Prayer – கூட்டு வழிபாடு 10.00am – 12.30pm |

**04.02.2019 – திங்கள் - அமாவாசை, 19.02.2019 – செவ்வாய் - பௌர்ணமி**


## ஆண்டுச்சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?

அன்னை புரியும் அற்புதங்களை உங்கள் உறவினர், நண்பர்களுக்கு இலகுவாக எடுத்துச் சொல்ல சக்தி ஒளியை பெற்றுக்கொடுங்கள்.

**சக்தி ஒளி**
**ஆன்மிக ஒளி பரப்பும் அறிவுச்சுடர்**

| தனி இதழ் | ஆண்டுச்சந்தா | ஆயள் சந்தா | வெளிநாட்டுச் சந்தா |
|---|---|---|---|
| ரூபா ₹ 15.00 | ரூபா ₹ 180.00 (இந்தியா) | ரூபா ₹ 2600.00 (இந்தியா) | இந்திய ரூபா ₹ 3500.00 (இரண்டு ஆண்டுகள்) |

ஆண்டுச்சந்தாக்களை மன்றங்களினூடாகவும் அல்லது ஆதிபராசக்தி அறநிலையத்துக்கு தொகையை அனுப்பி நேரடியாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உங்கள் பெயர், விலாசம், மற்றும் நீங்கள் யாருக்கு அனுப்ப விரும்புகிறீர்களோ அவர்கள் பெயர்,விலாசம், மற்றும் இத்தனை காலத்திற்கான சக்தி ஒளி சந்தா எனும் விபரங்கள் தெளிவாக எழுதப்படல்வேண்டும்.

உரிய தொகையினை **"ஆதிபராசக்தி கல்வி,மருத்துவ, பண்பாட்டு அறநிலை"** எனும் பெயருக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

Address: Editor,'Sakthi Oli' Office, Adhiparasakthi Sithar Peetam, Melmaruvathur 603319, Tamil Nadu, South India.



# திருமதி அம்மா பதில்கள்

- திருமதி இலட்சுமி பங்காரு அடிகளார்

*பரம்பொருள் அவதரிக்கும்பொழுது, அதனுடன் துணை தெய்வங்களும்(ஈஸ்வர கோடிகள்) அவதரிக்கின்றன என்று பழைய சக்தி ஒளி மலரில் படித்தேன். பரம்பொருளான நமது "அம்மா"வின் குடும்பத்தில் உள்ளவர்களும் நிச்சயம் தெய்வப் பிறவிகளேயன்றி, வேறு சாதாரண மனிதர்கள் பிறக்க முடியாது என்பது எனது எண்ணம். தயவு செய்து தங்களின் நடு நிலைமையான கருத்தைக் கூறுங்கள் அம்மா..!*

எங்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் இத்துணை பெருமைக்கு உரியவர்கள் தானா? என்பது எனக்குத் தெரியவில்லை. பூவோடு சேர்ந்த நாரும் மணப்பது போல அம்மாவின் குடும்ப பந்தத்தோடு சேர்ந்ததால் நாங்களும் பேசப்படுகிறோம் என்பதுதான் உண்மை. ஏதோ ஒரு புண்ணியம் இப்பிறவியில் அம்மாவோடு வாழ்கின்ற பெரிய பேறு கிடைத்திருக்கிறது. அதை எல்லோரும் காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்பது மட்டும் தெளிவாகப் புரிகிறது. தெய்வப் பிறவி என்பதைவிட நல்ல மனிதப் பிறவியாக வாழ்ந்தாலே போதுமானது என்றுதான் நான் நினைக்கிறேன்.

*அழுக்கு, சோதனை, பந்தபாசம் என்ற செல்கள் மனத்தை அரிக்காமல் இருக்க என்ன வழி அம்மா?*

மனித உடலில் உள்ள செல்கள் சிறு வயதில் வளர்ச்சி அடையும்போது ஒன்று இரண்டாகவும், இரண்டு நான்காகவும் பிரிந்து பெருகுவதால் வளர்ச்சி ஏற்படுகிறது என்றும் வயதாக, வயதாக செல்களின் எண்ணிக்கை குறைந்து கொண்டே வருகிறது என்றும்தான் கேள்விப்பட்டிருக்கிறேன். செல்கள் மனத்தை அரிக்கும் என்பதை இப்போதுதான் நீங்கள் கூறக் கேள்விப்படுகிறேன். பாத்திரத்தில் அழுக்கு சேர்ந்தால் எப்படி தேய்த்துச் சுத்தம் செய்கிறோமோ அதுபோல மனத்தில் அவ்வப்போது ஏற்படும் அழுக்குகளை நாமே திருத்தித்தான் போக்கிக்கொள்ள வேண்டும். வாழ்க்கையில் சோதனை வந்தால் அதனைத் தக்கபடி சமாளித்து சாதனையாக மாற்ற முயற்சிக்க வேண்டும். பந்தபாசமெல்லாம் முற்றிலுமாக நம்மை விட்டுப் போய்விடாது. சிறிது சிறிதாக அதை விட்டு விலக முயற்சிக்க வேண்டும். இதற்கெல்லாம் ஆன்மிக ஈடுபாடும், தெய்வ வழிபாடும்தான் வழிவகுத்துக் கொடுக்கும்.

*அம்மா! பாவிகள் எப்போது மன்னிக்கப்படுகிறார்கள்? பாவிகள் மன்னிக்கப்படவேண்டியவர்கள்தானா அம்மா?*

தான் செய்த பாவத்தை எண்ணி வருந்தி, திருந்தும் பாவிகள் கட்டாயம் தெய்வத்தால் மன்னிக்கப்படுவார்கள். ஒருவர் செய்த குற்றத்திற்கு ஏற்ற தண்டனை வழங்கும் நீதிபதிகள் போல அவரவர் பாவங்களுக்கேற்ற தண்டனை கட்டாயம் கிடைக்கும். நீதிபதிகள் கூட சாட்சியை வைத்துத்தான் நீதி வழங்கும் சூழ்நிலை உள்ளது. ஆனால் தெய்வம் தானே சாட்சியாக நின்று நீதி வழங்கும். தெய்வம் மன்னிக்கவும் செய்யும். அது அது அவரவர் செய்யும் பாவத்தைப் பொறுத்தது.

## ஆன்மாவுக்கு ஆன்மிகம் அவசியம்

"விழா! ஆன்மா, அருள், தெய்வம், மனம் அனைத்தும் எதற்கு?
உடலுக்கு உணவு அவசியம். அதுபோல ஆன்மாவுக்கு ஆன்மிகம் அவசியம்."

- அன்னையின் அருள்வாக்கு

## Melbourne - Mandrams – Upcoming Events – February 2019



# Melmaruvathur Aadhiparasakthi Vara Valipaattu Mahalir Mandram



Join Prayers: Every Friday 7.30p.m. – 9.30p.m.


**Vermont South Community House,**
Karobran Drive – Vermont South 3133 - (Mel.Ref.: 62 G 7)

| | | | |
|---|---|---|---|
| 01.02.2019 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.02.2019 | TUESDAY – செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 22.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**Lalor**

Join Prayers: Once a month - Sunday 4.00p.m. – 6.00p.m.
Yarra Plenty Regional Library Service (Hall adjacent to the library)
May Road - Lalor 3075 (Mel.Ref.: 8 K 6)

ஆன்மிககுரு
அருள்திரு அடிகளார் அருளிய
# குரு உபதேசங்கள்



### வேள்வி முறைகளைக் கற்றுக் கொள்ளுங்கள்

“அம்மா இங்கே புதுப்புது வேள்வி முறைகளைச் சொல்கிறது. இங்கே வருபவர்கள் - பெண்கள் இவற்றையெல்லாம் பார்த்தும், கேட்டும் தலையாட்டுவதோடு சரி! கற்றுக் கொள்வது இல்லை. பயன்படுத்திக் கொள்வது கிடையாது.

இவற்றையெல்லாம் யார் யாரோ கற்று வைத்துக் கொண்டு பயனடையப் போகிறார்கள். நீங்கள் ஏமாறப் போகிறீர்கள். பயன்படுத்திக் கொள்கிற புத்திசாலித்தனம் இல்லாமல் போனால் அதற்கு நானா பொறுப்பு? அம்மாவா பொறுப்பு?

ஒவ்வொரு மன்றத்திலும் வேள்வி முறைகளைக் கற்றுக்கொண்ட தொண்டர்கள் எத்தனை பேர் இருக்கிறீர்கள்?”

### வெறுமனே இருக்கக்கூடாது

“ஆன்மிகத்துக்கென்று நீங்கள் வந்துவிட்ட பிறகு, ஒன்று மேலே போக வேண்டும். முயன்று கொண்டாவது இருக்க வேண்டும் வெறுமனே சோம்பி இருக்கக்கூடாது.

மேட்டின் மேல் வண்டிச் சக்கரம் ஏறுகிறது. பாரம் அழுத்துகிறது. என்ன செய்வீர்கள்? எப்படியாவது மேட்டின்மேல் ஏறிவிட வேண்டும். அல்லது வண்டிச் சக்கரம் உடைந்தாவது போக வேண்டும் அதுவும் இல்லாதபோது முயன்று ஏற வேண்டும்.

தலையில் கையை வைத்துக் கொண்டு சும்மா இருக்கக் கூடாது!”

# Sydney - Mandrams - Upcoming Events – February 2019



**Melmaruvathur Swayambu Arulmihu Annai Athiparasakthi Sitherpeedam NSW Mandram (Australia)**
Contact: 02-96420519, 0439686452



**Every Friday : 7.30p.m. – 9.30p.m.**
Westmead Public Primary School
Moree Street – Westmead

| | | | |
|---|---|---|---|
| 01.02.2019 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 19.02.2019 | TUESDAY – செவ்வாய் | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja பௌர்ணமி விளக்குப் பூஜை |
| 22.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |

**கண்டதும் கேட்டதும்**

### கர்நாடகத் தொண்டர்களின்
## ஆன்மிக அனுபவங்கள்

**பகுத்தறிவுக்கு எட்டாத சம்பவம் அது**

பகுத்தறிவு பேசுகிறவர்களும் அறிவு ஜீவிகளும் ஏன் நம் அம்மா பக்தர்களும் கூட நம்ப மறுக்கிற சம்பவம் அது. ஒரு புராணப் படத்தில் வருகிற சம்பவம் போன்றது அது.! பல வருடங்களுக்கு முன்னாலேயே அம்மா அருள்வாக்கில் சொன்னாள். “புராண காலத்து அற்புதங்களையும் நடத்திக் காட்டுவேன் என்று”. அத்தகைய சம்பவம் ஒன்றை நடத்திக் காட்டியிருக்கிறாள் அன்னை.

பெங்களூர் நாராயணப்பா சொல்லிய அந்த அற்புதம் இது. ‘நம்பினால் நம்புங்கள்! நம்பாவிட்டால் போங்கள்!’

பெங்களூருக்குச் சற்றுத் தொலைவில் ஒரு நகரம். அங்கேயொரு காண்ட்ராக்டர். பெயர் தேவராஜ். நல்ல வருமானம். பணம் தாராளமாகப் புரண்டது. 18 வருடங்களுக்கு முன்பு 15 இலட்சம் செலவில் பிரமாதமாகப் பங்களா கட்டி ஓஹோ என்று வாழ்ந்தவர். சமீப காலத்தில் அவருக்குச் சோதனைப்படலம் ஆரம்பம் ஆயிற்று.

அவர் பங்களா கட்டிய இடம் கொலை விழுந்த இடமோ.. என்னவோ.. தெரியவில்லை.

இராத்திரி 12.00 மணிக்கு மேல் பலர் சேர்ந்து கூக்குரல் இடும் சப்தம். ‘விடாதே! பிடி! கொல்லு!’ என்று கூக்குரல். எல்லாம் தெலுங்கில்தான்!

அப்புறம்.. ‘ஐயோ என்னை விட்டுடு! கொன்னுடாதே..!’ என்று அபயக்குரல்.

**வேம்பு**

வீட்டிலிருந்த காண்ட்ராக்டர் அலறியடித்தபடி வெளியே ஓடி வந்து பார்த்தால் ஒரு சப்தமும் காணோம்.. இப்படி ஒரு நாளா.. இரண்டு நாளா..? பல மாதங்கள்!

இந்த சப்தம் வீட்டிலிருந்தவர்களுக்கு மட்டும்தான் கேட்டதா என்றால் இல்லை.. அக்கம் பக்கத்துக்காரர்களுக்கும் கேட்டு ஏதோ கலாட்டா நடக்கிறது என்று ஓடி வந்து பார்த்தால் ஒரு சப்தமும் காணோம். நிசப்தமாய் இருக்கும்..

(தொடர்ச்சி..9ஆம் பக்கம்)


# Sydney - Mandrams - Upcoming Events – February 2019



**மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர்**
**Melmaruvathur Athiparasakthi Sithar Peeta Sydney Centre**
Contact: 02-97643872, 0416217317

**Weekly Prayers - Every Friday: 7.30p.m. – 9.00p.m.**

Homebush High School (Gymnastic Hall)
Bridge Road, Homebush 2140



04.01.2019 – பாடசாலை பொது விடுமுறைகளை முன்னிட்டு பூஜைகள் நடைபெறாது என்பதை அறியத்தருகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| 01.02.2019 | FRIDAY - வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 08.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 15.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | கூட்டு வழிபாடு-Joint Prayer |
| 22.02.2019 | FRIDAY – வெள்ளி | 7.30p.m. – 9.30p.m. | Pournami Vilakku Pooja<br>பௌர்ணமி விளக்குப் பூஜை |

## கண்டதும் கேட்டதும்...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

'என்ன இது' என்று விசாரித்திருக்கிறார்கள். "அட இது நாளும் நடக்கிற இராத்திரி கலாட்டாதான்யா.. வெளியே வந்து பார்த்தால் ஒரு மண்ணும் காணோம். எல்லாம் மர்மமாய் இருக்கு. எல்லாம் பழகிப் போச்சு! தூக்கம் போச்சு! நிம்மதி போச்சு!" என்று புலம்பினார் அந்தக் காண்ட்ராக்டர்.

சோதனை மேல் சோதனையாக அவரது மகள் ஒருத்தியைத் தீய ஆவி ஒன்று பிடித்துக்கொண்டு படாதபாடு படுத்தியது. அது மட்டுமா..? தொழிலில் சரிவு வர ஆரம்பித்தது. குறைத்து ஏலம் கேட்டால் இவ்வளவு குறைந்த தொகையில் இவர் எப்படி வேலையை முடிப்பார் என்று சந்தேகித்தார்கள். அதிகத் தொகையில் ஏலம் கேட்டால், அவ்வளவு தொகைக்கு ஆர்டர் கொடுக்க முடியாது என்று மறுப்புத் தெரிவித்தார்கள். விளைவு..? தொழிலில் சரிவும் வீழ்ச்சியும் அடுத்தடுத்து வரலாயின.

அந்தக் காண்ட்ராக்டர் என்னென்ன கோயில் உண்டோ அங்கெல்லாம் போனார். மந்திரவாதிகளை அழைத்துக் கொண்டு வந்து என்னென்ன பரிகாரங்கள் சொன்னார்களோ.. எல்லாம் செய்து பார்த்தார். ஒரு பயனும் ஏற்படவில்லை. 'அடக்கடவுளே!' என்று தலையில் கை வைத்துக்கொண்டு சோர்ந்து போனார். ஏராளமான பண விரயம்! மன உளைச்சல்! இவைதான் மிச்சம்.

நேரம் நல்ல நேரமாக இருந்தால், ஒருவனை உச்சத்தில் கொண்டுபோய் வைக்கும். கெட்டநேரம் வந்தால் படிப்படியாய்ச் சரிவை உண்டாக்கிப் பள்ளத்தில் தள்ளும். அந்தக் காண்ட்ராக்டர் பள்ளத்தில் விழுந்தார். அவர் செய்த தான தருமமோ.. அவர் முன்னோர் செய்த தான தருமமோ.. நிலைமை மாறிற்று. ஆதிபராசக்தி தன் கடைக்கண் பார்வையை அந்தக் காண்ட்ராக்டர் குடும்பத்தின் மேல் செலுத்தினாள். ஆம்! அதன் பிறகு நடந்தவை இவை!

ஒருநாள் அந்த காண்ட்ராக்டர் தூங்கிக் கிடந்தபோது ஓர் அற்புதமான கனவு! தெய்வக் கனவு! எங்கேயோ பார்த்தபடி ஓரிடத்தில் நிற்கிறார். எதிரே ஒரு சூலம் வந்து தரையில் நிற்கிறது. அடுத்து எங்கிருந்தோ ஒரு குரல்! "என்னைப் பின் தொடர்ந்து வாடா!" அந்தக் குரல் அவர் தாய் மொழியிலேயே உத்தரவிடுகிறது. சூலம் குறுக்காகச் செல்கிறது. அவரும் பின் தொடர்கிறார். நீண்ட தூரம் பெங்களூர் நகரத்தின் தெருக்கள் வழியாகச் செல்கிறது. பெங்களூர் நகரம் அவருக்குப் பரிச்சயமான நகரம். தெருக்கள் பரிச்சயமான தெருக்கள். பெங்களூர் நகரத்தின் பல தெருக்களைத் தாண்டி ஓரிடத்தில் அந்தச் சூலம் நிற்கிறது. அந்த இடம்தான் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் இருக்குமிடம்!

கனவு கலைகிறது. எழுந்திருக்கிறார். இந்தக்கனவின் தாத்பரியம் இவருக்குப் புரியவில்லை. அந்தச்சூலம் சென்ற திசை – தெருக்கள் - அடையாளங்கள் இவற்றை மீண்டும் மீண்டும் நினைவுக்குக் கொண்டு வருகிறார்.

எங்கோ ஓரிடத்தில் அந்தச் சூலம் நிலைகுத்தியபடி நின்று விட்டதே, அது எந்த இடம்? அது மட்டும் தெரியவில்லை!

(தொடர்ச்சி..10ஆம் பக்கம்)

## கண்டதும் கேட்டதும்...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

சரி! சூலம் காட்டிய வழியில் சென்றுதான் பார்க்கலாமே என்ற குறுகுறுப்பில் மறுநாள் புறப்பட்டார். பெங்களூர் வீதிகள் கட்டிடங்கள் கனவில் கண்ட அடையாளங்களை வைத்துக்கொண்டு புறப்பட்டார். ஆதிபராசக்தி வார வழிபாட்டு மன்றத்தின் வந்து நின்றார்.

என்ன ஆச்சரியம்! அதே வெள்ளை நிறத்தில் பளபளக்கும் சூலம். சற்றுப் பின்னால் அம்மன் விக்கிரகம்! இது என்ன? கோயிலாகவும் தெரியவில்லை. பஜனை மண்டலியாகவும் தெரியவில்லை என்று அந்த காண்ட்ராக்டர் நினைத்து அருகிலிருந்தவரிடம் விசாரித்தார்.

பெங்களூர் நகரில் வழிபாட்டுக் கூடங்களுக்கு பஜனை மண்டலி என்று பெயர். சாய்பாபா பெயரில் அங்கே பல பஜனை மண்டலிகள் உள்ளன.

அங்கிருந்தவர்கள் நம் மேல்மருத்துவர் அன்னை பற்றியும், மன்றத்தை நடத்திவரும் நாராயணப்பாவைப் பற்றியும் சொன்னார்கள். உடனே நாராயணப்பாவைச் சந்தித்தார். “இந்த அம்மனுக்குப் பூசை செய்யணும். அதற்குண்டான வழிமுறை என்ன?” என்று கேட்டார்.

“வந்தது வந்தீர்கள்.. முதல்ல உங்க கையால் எலுமிச்சம்பழம் விளக்குப் போடுங்க” என்றார். எலுமிச்சம்பழ விளக்கேற்றி வைத்தார். கண்ணீர் மல்க அம்மாவைக் கும்பிட்டார். “முடிஞ்சா அன்னதானம் பண்ணுங்கோ..” என்றார் நாராயணப்பா. மறுவாரம் அன்னதானமும் செய்தார். அதன்பிறகு தன் கதையை அந்த காண்ட்ராக்டர் சொல்லியிருக்கிறார்.

“சரி! இனிமேல் எல்லாம் நல்லபடியாகவே நடக்கும்! கவலைப்படாமல் போய் வாங்கோ!” என்றார் நாராயணப்பா.

அடுத்த முறை தீய ஆவியால் அலைக்கழிக்கப்படும் மகளை அழைத்துக்கொண்டு மன்றம் வந்தார். அவருக்கு திருஷ்டி கழித்து கலச தீர்த்தம் அருந்தக் கொடுத்து எலுமிச்சம்பழ விளக்கேற்றச் சொல்லி அனுப்பி வைத்தார்.

அங்கே யார் வந்தாலும் முதலில் எலுமிச்சம்பழ விளக்குப் போடு என்பதுதான் நாராயணப்பா சொல்கிற யோசனை. அப்புறம்தான் கலசதீர்த்தம், திருஷ்டி, பிரசாதம் எல்லாம்...!”

### டி.வியில் அம்மா! ஆவி ஓடியது

“அந்தப்பெண் அம்மாவைக் கும்பிட்டுச் சென்ற பிறகு என்ன நடந்திச்சு தெரியுமா புலவரே..?

விஜய் டி.வி.யிலோ, ராஜ் டி.வி.யிலோ நம்ம அம்மாவைப் பத்தி வந்ததில்லே.. அப்படி வந்த நிகழ்ச்சி ஒன்றை அந்தப் பொண்ணு டி.வியிலே பார்த்திருக்கு!

(தொடர்ச்சி..11ஆம் பக்கம்)


**புதிய பரிணாம வளர்ச்சியில் ஆதிபராசக்தி இணையத்தளம்**



ஆன்மிக விடைதேடும்
அதிக பக்தர்களின் மனதைக்கவர்ந்த
**ஆதிபராசக்தி இணையத்தளம்**
**www.adhiparasakthi.co.uk**

**“ஜோதி” ஆன்மிகச் செய்திச் சுடரை**
**www.adhiparasakthi.co.uk என்ற**
**இணையத்தளத்தின் ஊடாக பதிவிறக்கம் செய்து வாசித்து பயன்பெறலாம்.**

ஜோதி
ஆன்மிகச் செய்திச்சுடர்

## கண்டதும் கேட்டதும்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

அம்மா வேப்பிலை ஏந்தி வர்ர மாதிரி காட்சி ஒண்ணு வருதில்லே... அதைப் பார்த்ததும் அப்படியே மயக்கமடைந்து விழுந்திருக்கு.. அப்புறம் அந்த ஆவித் தொந்தரவு இல்லவே இல்லை. அப்புறம் வராத காண்ட்ராக்ட் வேலையெல்லாம் எடுத்துச் செய்ய அட்வான்சோடு ஆர்டர் வந்தது.

அவருக்கு ரொம்ப சந்தோஷம். இப்போ சொல்லுங்கோ.. நாம் பிரச்சாரம் பண்ணியா அந்த ஆளு இந்த மன்றத்துக்கு வந்தாரு? நாமெல்லாம் சும்மா! என்னவோ நம்மளை வச்சு அம்மா என்னென்னவோ பண்ணிக்குது'' என்றார் நாராயணப்பா.

### தன் இருப்பைப் புலப்படுத்திவிட்டாள்

அந்தச் சூலத்தின் மூலமும் அந்தக் கனவு அனுபவம் மூலமும் அம்மா அந்த மன்றத்தில் தன் இருப்பைப் புரியவைத்துவிட்டாள்.

இந்திரா நகரைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் முத்துக்கிருஷ்ணனையும் என்னையும் ''எங்க வீட்டிற்கு ஒருமுறை வாங்க சக்தி!'' என்று வற்புறுத்திக் கூப்பிட்டார்.

''ஏம்மா! நாங்க பிரச்சாரப் பணிக்கு வந்திருக்கிறோம். உங்கள் பகுதிக்கு வர்றபோது சொல்லுங்கள் வர்றோம்'' என்றோம். அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட அற்புதம் ஒன்றைச் சொன்னார். சக்தி மாலையில் உள்ள டாலரின் மகத்துவம் எப்படிப்பட்டதென்று சொல்லச் சொல்லக் கேட்டுப் பரவசப்பட்டோம்.

### ஆன்மக் கனல்

நம் குருபகவான் ஒருமுறை சொன்னார்கள்:

''எல்லோருக்குள்ளேயும் ஆன்மக்கனல் இருக்கு. அதை நாமதான் விசிறி ஊதிப் பற்ற வைக்கணும். படிச்சவனைவிடப் பாமரனை எளிதில் ஆன்மிகத்திற்குக் கொண்டு வந்துவிட முடியும். அதனால்தான் அடிமட்டத்துல இருக்கிறவனிடம் நாம போகணும். கிராமத்துக்குப் போகணும், சேரிக்குப் போகணும். குப்பங்களுக்குப் போகணும். அங்கே போய் நம்ம தொண்டர்கள் தொண்டு செய்யணும். ஆன்மா எல்லார்கிட்டேயும் இருக்கு. நீறுபூத்த நெருப்பா இருக்கு. அதைக் கொஞ்சம் ஊதி எரிய வைக்கணும். வழிபாடு தொண்டு தியானம் போன்றவற்றால்தான் அந்தக் கனலை உரிய வைக்கணும்'' என்றார்.

### அடிமட்டமும் பெண்ணினமும்

அடிமட்டத்தில் இருப்பவனை ஆன்மிக ரீதியாக உயர்த்தவும், பெண்கள் இனத்தை ஆன்மிக ரீதியாக உயர்த்துவதும் அல்லவோ இந்த அவதார நோக்கம்!
நாமெல்லாம் ஆன்மிகத்தில் அனாதைகள் போலத்தானே கிடந்தோம்?

### அடிப்படைத் தேவைகள்

ஓர் ஆன்மா இறையருளில் சென்று கலக்க வேண்டுமானால் அடிப்படையில் மூன்று விஷயங்கள் தேவை. அவை 1.இஷ்ட தெய்வம் 2.குரு 3.மந்திரம். இந்த அடித்தளங்களை அம்மா போட்டுக் கொடுத்தாயிற்று.

என்னதான் ஒருவன் சிவ பக்தனாயினும், விஷ்ணு பக்தனாயினும், முருக பக்தனாயினும் குரு என ஒருவர் இல்லையேல் ஆன்ம வளர்ச்சி பெற முடியாது. ஆன்மிகத்தில் அவன் அநாதைதான். ஏன் தெரியுமா? ''குருவருள் இன்றித் திருவருள் இல்லை'' என்பது அன்னை ஆதிபராசக்தியின் அருள்வாக்கு. விவரம் புரிந்த செவ்வாடைத் தொண்டன் இம்மூன்று அடிப்படைகளைப் பற்றிக் கொண்டால் அதிர்ஷ்டசாலி.

### குரு தத்துவம்

அம்மா படத்திலே இருக்கிற இவர் யார்? என்று பெங்களூரில் கேட்ட சிலருக்கு ''இவர்தான் எங்கள் குரு'' என்று சொன்னவுடன் எதிர்க்கேள்வி கேட்காமல் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள். ஆனால் இங்கோ.. குரு தத்துவத்தின் நுட்பங்களைப் புரியாதவர்களாகப் படித்தவர்கள் இருக்கிறார்கள். விவரம் தெரிந்த ஒருசில பிராமணர்கள் மட்டுமே குருவின் அருமை தெரிந்தவர்களாக இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் நாத்திகம் பரவிய காரணத்தால் ஆன்மிகத்தில் உள்ள நுணுக்கமான சில உண்மைகளை ஜீரணித்துக்கொள்ள முடியாத அளவிற்குப் படித்தவர்கள் பலவீனமான மனமுடையவர்களாக மாறிப் போனார்கள். தமிழ்நாட்டின் சாபக்கேடுகளில் இதுவும் ஒன்று.

### பத்மநாபன் சொன்னவை

சக்தி பத்மநாபன் அவர்களோடு அளவளாவிக் கொண்டிருந்தபோது அம்மாவிடம் தான் வந்து சேர்ந்த கதையைச் சொன்னார்.

(தொடர்ச்சி...12ஆம் பக்கம்)

## கண்டதும் கேட்டதும்...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

“எல்லோரையும் போல அம்மாவின் அருமையைப் புரிந்து கொள்ளாமல் செவ்வாடைகளைப் பார்த்து நானும் கேலியும் கிண்டலும் செய்தவன்தான் சக்தி!

எனக்கு ஊதுபத்தி வியாபாரம். தொழில் நல்லா நடந்துக்கிட்டிருந்துச்சி. திடீரென்று ஒரு சோதனை. கடுமையான முதுகு வலி. நிமிர முடியவில்லை.. உட்கார முடியவில்லை.. படுக்க முடியவில்லை. .என் மனைவி டாக்டரிடம் அழைத்துப் போனாள். எக்ஸ்ரே எடுத்துப் பார்த்ததில் முதுகெலும்பில் உள்ள மூன்று இணைப்பு எலும்புகள் பிசகிவிட்டதாகவும், ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றும் டாக்டர் கூறிவிட்டார்.

நரக வேதனையில் துடித்துக்கொண்டிருந்த நான் 12000 ரூபாய் ரெடி பண்ணி வைத்துக் கொண்டேன். நாளைக்கு ஆபரேஷன். ஆபரேஷனில் சரியாகுமோ.. அல்லது சரியாகாதோ.. தொழில் என்ன ஆவது? மனைவி மக்களை எப்படிக் காப்பாற்றுவது? என்று பல யோசனைகள். ஏன் எதிர்காலமே இருண்டுவிட்டது போலவும் சூன்யமாகிப் போய்விட்டதாகவும் எண்ணி விரக்தியடைந்தேன்.

இந்த நிலையில் எங்கள் பகுதியில் இருந்த மன்றத்தார் இருமுடி ஏந்தி மருவத்தூர் செல்ல எண்ணி 44 இருமுடிகளைத் தயார் செய்து வைத்திருந்தார்கள். 43 பேர் வருவதாகச் சம்மதம் தெரிவித்து வந்துவிட்டார்கள். ஒரேயொரு இருமுடி! அதை எடுக்க ஆள் கிடைக்கவில்லை.

எனது நிலையைக் கேள்விப்பட்டு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். ‘ஆபரேஷன் அப்புறம் வைத்துக் கொள்ளலாம். அம்மாவை வேண்டிக் கொண்டு எங்களோடு புறப்பட்டு வாருங்க சக்தி!’ என்று கூப்பிட்டார்கள். பஸ்ஸில் மேலும் ஒரு சீட்டுக்கு ஆள் வேண்டுமே என்பது அவர்கள் கவலை.

“இவர் இருக்கிற நிலையில் யார் துணையும் இல்லாமல் எப்படி அனுப்புவது சாமி?” என்று என் மனைவி கேட்டாள்.

“இவரைப் பத்திரமாக அழைத்துக்கொண்டு போய்ப் பத்திரமாக அழைத்து வந்து வீட்டில் சேர்ப்பது எங்கள் பொறுப்பு.. போதுமா..?” என்றார்கள் மன்றத்தினர்.

அரை மனதோடு என் மனைவி என்னைக் கோயிலுக்கு பஸ்ஸில் ஏற்றி அனுப்பி வைத்தாள்.

மருவத்தூர் வந்தடைந்தோம். என்னைக் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு வந்து ஆலயத்தில் ஓரிடத்தில் பத்திரமாகச் சாய்ந்து உட்காரச் சொல்லிவிட்டு ‘நாங்கள் இருமுடி செலுத்திவிட்டு வந்துவிடுகிறோம். அப்புறம் சாவகாசமாக உங்களை அழைத்துக்கொண்டு போகிறோம். கூட்டத்தில் எங்களோடு வந்து நீங்கள் சிரமப்பட வேண்டாம்’ என்று சொல்லிவிட்டு உடன் வந்தவர்கள் போய்விட்டார்கள்.

சே! என்ன வாழ்க்கை என்ற வெறுப்பு! ஒன்றுக்கும் உதவாமல் போய்விட்டோமே என்ற விரக்தி..! மன வேதனையில் வலியோடு சாய்ந்து கிடந்தேன். அப்போது **ஒலிபெருக்கியில் ஓர் அறிவிப்பு:**

சக்திகளே.. ஆபரேஷன் செய்து கொண்டவர்கள், இதய நோயாளிகள், இரத்த அழுத்தம் உள்ளவர்கள், ஆஸ்துமா நோயாளிகள் இவர்கள் அங்கப்பிரதட்சணம் வரத் தேவையில்லை என்று அம்மா ஆணையிட்டிருக்கிறார்கள். எனவே அத்தகையோர் அங்கப்பிரதட்சணம் வரவேண்டாம்..!” என்று அறிவித்தபடி இருந்தார்கள்.

### செத்துத்தான் போவோமே..

நரக வேதனையோடு துடித்துக்கொண்டிருந்த எனக்கு அப்போது செத்துப் போவதே மேல் என்று தோன்றியது. அங்கப்பிரதட்சணம் வந்து செத்துப் போவோம் என்ற தீர்மானத்தோடு அருகிலிருந்த செவ்வாடைத் தொண்டர்களை அழைத்தேன். “சக்தி! நான் அங்கப் பிரத்ட்சணம் வரவேண்டும். எனக்கு முதுகுவலி. என்னைக் கொஞ்சம் கைத்தாங்கலாகப் பிடித்துக் கொண்டு கருவறை முன்னாலே படுக்க வைத்தால் போதும். சமாளித்துக் கொள்வேன்” என்றேன்.

இரண்டு தொண்டர்கள் உதவிக்கு வந்தார்கள். ‘ஓம்சக்தி!’ என்று கதறியபடி ஒருக்களித்துச் சாய்ந்தேன். அவ்வளவுதான். ஏதோவொரு சக்தி என்னையும் அறியாமல் உருட்டிக்கொண்டே போயிற்று. ஒருமுறையல்ல! ஆலயத்தை மூன்று சுற்றுச் சுற்றி வருமாறு உருட்டிக் கொண்டு போயிற்று! மூன்று சுற்று எப்படி வந்தேன்? எப்படி எழுந்தேன்? எனக்கே புரியவில்லை. அந்த முதுகு வலி எப்படிப் போயிற்று? தெரியவில்லை! நிமிர்ந்து பார்த்தேன். நிமிர முடிந்தது! குனிந்து பார்த்தேன். குனிய முடிந்தது! இப்படியும் அப்படியும் உடம்பை அசைத்துப் பார்த்தேன். அசைய முடிந்தது.

அதற்குள் பெங்களூர்க்காரர்கள் ஓடி வந்தார்கள். எனக்கு உதவியாக வந்த செவ்வாடைத் தொண்டர்களைத் திட்டித் தீர்த்தார்கள். “இவரை எப்படிப்பட்ட நிலையில் அழைத்து வந்திருக்கிறோம் தெரியுமா உங்களுக்கு..? இவரை யார் அங்கப்பிரதட்சணம் வரச் சொன்னது..?” என்று ஆவேசப்பட்டார்கள்.

(தொடர்ச்சி..13ஆம் பக்கம்)

## கண்டதும் கேட்டதும்...

(12ஆம் பக்கத் தொடர்ச்சி)

“சக்தி அவர்கள் மேல் தப்பில்லை. நான்தான் உதவிக்கு வரும்படி கூப்பிட்டேன்..” என்று சமாதானப்படுத்தினேன்.

“நாங்க வர்றதுக்குள்ளே என்னய்யா அவசரம்? நீங்க அங்கப் பிரதட்சணம் வரவேண்டிய அவசியம் இல்லையே.. மைக்கில் சொல்லியதை நீங்கள் கேட்கவில்லையா..?” என்றார்கள்.

“எதையும் நான் விளக்கமாகச் சொல்ல விரும்பவில்லை. எப்படியோ அங்கப்பிரதட்சணம் முடித்துவிட்டேன். இப்போது அந்த முதுகுவலி மறைந்து போய்விட்டது” என்றேன்.

சொல்ல முடியாத சந்தோஷத்தில் இப்போது மிதந்தபடிக் கிடந்தேன்.

### குரு தரிசனம்

ஆபரேஷனுக்காக வைத்திருந்த பணத்தைக் கையோடு கொண்டு வந்திருந்தேன்.

குரு தரிசனம் பெற வேண்டி அடிகளாரைப் பார்க்கப் போனேன். கையில் வைத்திருந்த ரூ.12000 தொகையை அப்படியே அம்மாவுக்குக் காணிக்கையாக வைத்துக் கொடுத்தேன்.

“இதெல்லாம் வேண்டாம். இதை எடுத்துக் கொண்டு போய்ப் பழையபடி உன் ஊதுபத்தி வியாபாரத்தைத் தொடங்கு” என்று சொல்லிய அடிகளார் “தொண்டு செய்!” என்றார்கள்.

நான் ஊதுபத்தி வியாபாரம் செய்கிறவன் என்பது அடிகளாருக்கு எப்படித் தெரியும்? அன்றுதான் முதன்முதலில் அடிகளாரைப் பார்க்கப் போனேன். நினைக்க நினைக்க ஆச்சரியமாக இருந்தது. அப்புறம் அடிக்கடி ஆலயம் வர ஆரம்பித்தேன். மன்றத்தில் சேர்ந்து பணி செய்ய ஆரம்பித்தேன்.

### எதிர்காலமே இருண்டுவிட்டதே..

என் எதிர்காலமே இருண்டு விட்டதே.. சூன்யமாகப் போயிற்றே.. இனி எப்படித் தொழில் செய்து குடும்பத்தைக் காப்பாற்றப் போகிறேன். படுத்த படுக்கையிலேயே கிடக்க வேண்டியதுதானா..? என்று விரக்தியடைந்து வெறுப்பேறிய அவரை மூன்று முறை அங்கப்பிரதட்சணம் வரப்பண்ணி ஊழ்வினையைத் தணித்து அவர் வாழ்வில் விளக்கேற்றி வைத்திருக்கிறாள் அன்னை. அந்த நன்றியுணர்ச்சியை மறக்காமல் தொண்டு செய்து வருகிறார் பத்மநாபன்.

### ஓர் ஆட்டோ டிரைவர் சொல்லியது

இளைஞர் அணியில் உள்ள ஆட்டோ டிரைவர் ஒருவரிடம் கேட்டோம். “ஏம்பா! அம்மா பணியில் கடைசி வரை நிற்பியா? சோதனை கொடுத்தால் ஓடிவிடுவியா?” என்று கேட்டோம்.

“என்ன சக்தி இப்படிக் கேட்கறீங்க? நான் ஆட்டோ ஓட்டிப் பிழைக்கிறேன். எனக்கு வர வேண்டிய சொத்தை என் சொந்தக்காரர்கள் அபகரிக்கப் பார்க்கிறார்கள். அம்மாவைத் தவிர எனக்கு வேறு சொந்தபந்தங்கள் இல்லை. எனக்கு வரவேண்டிய சொத்தை அம்மா மீட்டுக் கொடுத்துச்சு. அதை வச்சு கடன் வாங்கி ஐந்து இலட்சம் செலவு செய்து வீடு கட்டியிருக்கிறேன். விவசாயத்தையும் பார்த்துக்கொண்டு ஆட்டோவையும் ஓட்டிக்கொண்டு மாதா மாதம் கடனையும் அடைத்துக் கொண்டு நல்லாவே இருக்கேன். எல்லாமே எனக்கு அம்மா போட்ட பிச்சை..!” என்று பெருமிதத்தோடும் விநயமாகவும் சொன்னார் அவர்.

“அது சரி அம்மா சோதிக்கவும் செய்யுமே..? அப்போது இப்படிப் பேசுவியா?” என்று கேட்டோம்.

“சோதனையும் வந்துச்சே.. என் சம்சாரத்துக்கு உயிருக்கு ஆபத்தான நோய் ஒண்ணும் வந்துச்சே.. அம்மாவை வேண்டிக்கிட்டுத்தான் டாக்டரிடம் போனேன். கடைசியிலே பயப்படறதுக்கு ஒண்ணும் இல்லை என்று ஆயிடுச்சு.

நான் குடிக்கிறதில்லே.. என்னுடைய கஸ்டமர்களை ஏமாத்தறதில்லை.. எந்தக் கெட்டப் பழக்கமும் வச்சுக்கிறதில்லே.. அப்படியிருக்கிற என்னை அம்மா விட்டிருமா?” என்றார் அந்த இளைஞர்.

அம்மா தங்கியிருந்த இடத்திலே தினமும் கன்னடத்து மக்கள் வரிசைத்தட்டு வைத்துக்கொண்டு தரிசிக்க வந்திருந்தார்கள். இவர்களில் பலர் மருவத்தூருக்கு வரமுடியாமல் வார வழிபாட்டு மன்றங்களில் பங்கு கொண்டு அன்னையிடம் பலன் கண்டவர்கள். அம்மா எனக்கு அது பண்ணிற்று இது பண்ணிற்று என்று வாஞ்சையோடு தரிசிக்க வந்தவர்கள். கன்னடத்தில் அம்மா மந்திரம் மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால் வீட்டில் அன்றாட வழிபாடு செய்து நன்மையடைந்து வருகிறார்கள்.

(தொடர்ச்சி...14ஆம் பக்கம்)

## கண்டதும் கேட்டதும்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

### கன்னடத்துப் பெண்மணிக்குக் காட்சி கொடுத்தது

“பெங்களூரில் மட்டுமல்ல... பத்ராவதி மன்றத்திலும் கன்னடத்து மக்கள் வழிபாட்டில் கலந்து கொள்கிறார்கள். அம்மா அவர்களுக்கும் அருள் தந்து பல அனுபவங்களைக் கொடுத்திருக்கிறாள் என்றார் ஒரு தொண்டர். உதாரணத்துக்கு ஒன்று சொல்கிறேன் கேளுங்கள்!” என்றார் அவர்.

பத்ராவதியில் ஒரு பெண்மணி. தமிழ் சுத்தமாகத் தெரியாது. மன்ற வழிபாட்டிலும் வீட்டு வழிபாட்டிலும் கன்னடத்தில்தான் அம்மா மந்திரம் சொல்லி வழிபடுவார். அம்மாவிடம் அளவற்ற பக்தி.

ஒரு நாள் வீட்டில் சமையல் செய்து கொண்டிருந்தபோது கேஸ் சிலிண்டர் வெடித்து உடம்பெல்லாம் தீக்காயங்களோடு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். இந்த கேஸ் பிழைக்காது என்று சொல்லி ஒரு கட்டிலில் கிடத்தி ஓரமாக ஒதுக்கி வைத்துவிட்டார்கள்.

ஒருநாள் அடிகளார் சென்று கட்டிலருகே நிற்கிறார். அந்தப் பெண்ணின் வாயைத் திறந்து கலச தீர்த்தம் ஊற்றுகிறார். உணர்வு வருகிறது. கண் திறந்து பார்க்கிறாள். நெற்றியில் குங்குமம் தடவுவது தெரிகிறது. தலையணை அடியில் பிரசாதப் பொட்டலம் வைப்பதை உணர முடிகிறது. அம்மா மறைகிறாள். அந்தப் பெண் உயிர் பிழைத்துக் கொள்கிறாள்.

“மணிபால் ஆஸ்பத்திரியில் அம்மா நேரில் காட்சி கொடுத்தது அந்தக் கன்னடத்துப் பெண்மணிக்கு உயிர்ப்பிச்சை கொடுத்த அற்புதம் நடந்தது சக்தி” என்றார் அந்த வேள்விக்குழுத் தொண்டர்.

### கோலார் தங்கவயலில் அம்மாவுக்கு வரவேற்பு

09.05.1999 ஞாயிறு அன்று அம்மா கோலார் தங்க வயலுக்கு எழுந்தருளினார்கள். பெமல் ஆலமரம் அருகில் பூரண கும்பத்துடன் வரவேற்பு.

ராபர்ட்சன்பேட்டை கராஸ்மல் சர்க்கிளிலிருந்து அம்மாவை அலங்கார ரதத்தில் அமரச் செய்து ஊர்வலமாக அழைத்துக்கொண்டு போனார்கள். முளைப்பாரி, ஓம் சக்தி விளக்கு, அகல் விளக்கு, கலசங்களுடன் நமது மகளிர்கள் வந்தனர். ஒயிலாட்டம், மயிலாட்டம், கரகாட்டம், சிலம்பாட்டம், பம்பை, உடுக்கை, நாதஸ்வரம், வாண வேடிக்கைகளோடு ஊர்வலம் கீதா ரோடு வழியாக கிங் ஜார்ஜ் ஹால் மைதானத்தை அடைந்தது.

அங்கே பிரமாண்டமான பந்தல் போடப்பட்டு தனி மேடையில் இரண்டு ஜோடிகளுக்கு இலவசத் திருமணம் நடத்தி வைக்கப்பட்டது. 50 பேருக்கு இலவச வேட்டி சேலை, ஊனமுற்றோர்க்கு உபகரணங்கள், சலவைப் பெட்டிகள், மாணவி மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் எல்லாம் வழங்கப்பட்டன.

மேடையில் அம்மா ஒன்றரை மணி நேரம் இருந்து தரிசனம் கொடுத்தபடி இருந்தார்கள். பின் மன்றங்களுக்கு எழுந்தருளி ஆசி வழங்கிவிட்டு பெங்களூர் திரும்பினார்கள்.

### தங்கவயல் தொழிலாளர்கள்

கோலார் தங்கவயல் பகுதியில் வாழ்பவர்கள் பலரும் தொழிலாளர்கள், தங்கச் சுரங்கம் மூடப்பட்டு விட்டதாம். 40 ஆயிரம் தொழிலாளிகள் வேலை பார்த்தார்களாம். இப்போது சுமார் 5000 பேர் மட்டும் இருக்கிறோம் என்றார்கள். ‘மற்றவர்கள் என்ன ஆனார்கள்?’ என்று கேட்டோம்.

எல்லோரும் பிழைப்பு தேடி மூலைக்கு மூலை பிரிந்து சென்று விட்டார்கள் என்றார்கள். இங்கே நிலைமை இப்படி. மற்றொரு பக்கம் கோவையிலே மில்கள் மூடப்படுகின்றன. இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தெருவிற்கு வரவிருக்கிறார்கள். பல பெரிய தொழிற்சாலைகள் மூடப்படும் நிலைக்கு வந்து கொண்டிருக்கின்றன.

இன்னொரு பக்கம் வெளிநாட்டுக் கம்பெனிகள் நம் உள்நாட்டுத் தொழில்களை நசுக்க வேண்டிச் சதித்திட்டம் தீட்டி வருகின்றனவாம்.

தொழில் வளர்ச்சி பெற்ற வெளிநாடுகளே பொருளாதார நெருக்கடியில் சிக்கித் திணறுகின்றனவாம். ‘குடை சாயும் கோபுரங்கள்’ என்ற தலைப்பில் தினமணியில் ஒருவர் படம்பிடித்துக் காட்டியிருந்தார்.

மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி வந்துகொண்டிருக்கிறதாம்.. சொல்கிறார்கள்!

இப்படிப்பட்ட சூழ்நிலை இந்தோனேஷியாவில் வந்தது. அங்கிருக்கும் இளைஞர்கள் விழித்துக்கொண்டார்கள்.

(தொடர்ச்சி..15ஆம் பக்கம்)

## கண்டதும் கேட்டதும்...

(14ஆம் பக்கத் தொடர்ச்சி)

### நம்நாட்டு இளைஞர்கள்

"சாலையோரத்தில் வேலையற்றதுகள்! வேலையற்றதுகள் மனதிலே விபரீத எண்ணங்கள்!"
-எங்கே முடியுமோ..? எப்படி முடியுமோ..?
அன்னை ஆதிபராசக்திதான் அப்பாவிகளான நம்மைக் காப்பாற்ற வேண்டும்!
ஓம் சக்தி!

குருவடி சரணம்! திருவடி சரணம்!!



**ஓம் சக்தியே! ஆதிபராசக்தியே!**

**ஆதிபராசக்தி சித்தர்பீடம் - மேல்மருவத்தூர்**

**ஆலய சிறப்பு விழாக்கள்**

### 2019 - ஸ்ரீ விளம்பி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| தை | 21 | 04.02.2019 | திங்கள் | அமாவாசை வேள்வி |
| மாசி | 07 | 19.02.2019 | செவ்வாய் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| மாசி | 19 | 03.03.2019 | செவ்வாய் |  ஆன்மிககுரு அருள்திரு அம்மா அவர்களின் 79ஆவது அவதாரப் பெருமங்கள விழா |
| மாசி | 22 | 06.03.2019 | புதன் | அமாவாசை வேள்வி |
| பங்குனி | 06 | 20.03.2019 | புதன் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| பங்குனி | 21 | 04.04.2019 | வியாழன் | அமாவாசை வேள்வி |
| பங்குனி | 23 | 06.04.2019 | சனி | தெலுங்கு வருடப் பிறப்பு |

### 2019 - ஸ்ரீ விகாரி வருடம்

| | | | | |
|---|---|---|---|---|
| சித்திரை | 01 | 14.04.2019 | ஞாயிறு | தமிழ் புத்தாண்டு |
| சித்திரை | 06 | 19.04.2019 | வெள்ளி | சித்திரைப் பௌர்ணமி வேள்வி பெருவிழா |
| சித்திரை | 21 | 04.05.2019 | சனி | அமாவாசை வேள்வி |
| வைகாசி | 04 | 18.05.2019 | சனி | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| வைகாசி | 20 | 03.06.2019 | திங்கள் | அமாவாசை வேள்வி |
| ஆனி | 01 | 16.06.2019 | ஞாயிறு | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| ஆனி | 17 | 02.07.2019 | செவ்வாய் | அமாவாசை வேள்வி |
| ஆனி | 31 | 16.07.2019 | செவ்வாய் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| ஆடி | 15 | 31.07.2019 | புதன் | அமாவாசை வேள்வி |
| ஆடி | 18 | 03.08.2019 | சனி | சித்தர் பீடத்தில் 48ஆவது |
| ஆடி | 19 | 04.08.2019 | ஞாயிறு | ஆடிப்பூர பெருவிழா |
| ஆடி | 30 | 15.08.2019 | வியாழன் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| ஆவணி | 13 | 30.08.2019 | வெள்ளி | அமாவாசை வேள்வி |
| ஆவணி | 27 | 13.09.2019 | வெள்ளி | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| புரட்டாசி | 11 | 28.08.2019 | சனி | அமாவாசை வேள்வி |
| புரட்டாசி | 12 | 29.09.2019 | ஞாயிறு | சித்தர்பீடத்தில் நவாராத்திரி பெருவிழா |
| புரட்டாசி | 26 | 13.10.2019 | ஞாயிறு | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| ஐப்பசி | 10 | 27.10.2019 | ஞாயிறு | அமாவாசை வேள்வி |
| ஐப்பசி | 26 | 12.11.2019 | செவ்வாய் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| கார்த்திகை | 10 | 26.11.2019 | செவ்வாய் | அமாவாசை வேள்வி |
| கார்த்திகை | 25 | 11.12.2019 | புதன் | பௌர்ணமி ஓம் சக்தி விளக்குப் பூஜை |
| மார்கழி | 09 | 25.12.2019 | புதன் | அமாவாசை வேள்வி |

# ஆன்மிக நாட்குறிப்பு

(அவுஸ்திரேலிய நேரம்)

| | | | | |
|---|---|---|---|---|
| 02.02.2019 | சனி | தை | 19 | சனிப்பிரதோஷ விரதம் |
| 04.02.2019 | திங்கள் | தை | 21 | **தை அமாவாசை விரதம்-** ஆரம்பம் காலை 05.22 மணி |
| 05.02.2019 | செவ்வாய் | தை | 22 | **அமாவாசை விரதம்** - நிறைவு காலை 08.03 மணி |
| 09.02.2019 | சனி | தை | 26 | சதுர்த்தி விரதம் |
| 11.02.2019 | திங்கள் | தை | 28 | **ஷஷ்டி விரதம்**<br>**கொடியேற்றம் -**<br>குன்றத்துக் குமரன் ஆலயம் - ரொக்பேங்க் - மெல்பேர்ண்<br>**கொடியேற்றம் -**<br>ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் - ரீஜண்ட்ஸ் பார்க் - சிட்னி |
| 13.02.2019 | புதன் | மாசி | 01 | கார்த்திகை விரதம் |
| 16.02.2019 | சனி | மாசி | 04 | ஏகாதசி விரதம் |
| 17.02.2019 | ஞாயிறு | மாசி | 05 | பிரதோஷ விரதம் |
| 19.02.2019 | செவ்வாய் | மாசி | 07 | **பௌர்ணமி** – ஆரம்பம் காலை 06.41 மணி<br><br>**தேர் உற்சவம்**<br>குன்றத்துக் குமரன் ஆலயம் - ரொக்பேங்க் - மெல்பேர்ண்<br>ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் - ரீஜண்ட்ஸ் பார்க் - சிட்னி<br><br>பஞ்சரத பவனி<br>**மாத்தளை அருள்மிகு முத்துமாரியம்மன் -இலங்கை**<br><br>**பௌர்ணமி திருவிளக்குப் பூஜை**<br>ஆதிபராசக்தி மகளிர் வார வழிபாட்டு மன்றம் - மெல்பேர்ண்<br>மேல்மருவத்தூர் சுயம்பு அருள்மிகு<br>அன்னை ஆதிபராசக்தி சித்தர் பீடம் நியுசவுத்வேல்ஸ் மன்றம்-சிட்னி |
| 20.02.2019 | புதன் | மாசி | 08 | **பௌர்ணமி** – நிறைவு காலை 02.53 மணி<br><br>**மாசி மகம்**<br>**தீர்த்தம்**<br>குன்றத்துக் குமரன் ஆலயம் - ரொக்பேங்க் - மெல்பேர்ண்<br>ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம் - ரீஜண்ட்ஸ் பார்க் - சிட்னி |
| 22.02.2019 | வெள்ளி | மாசி | 10 | சங்கடஹர சதுர்த்தி<br>**திருவிளக்குப் பூஜை**<br>மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர் பீட சிட்னி சென்டர் - சிட்னி |
| 03.03.2019 | ஞாயிறு | மாசி | 19 | பிரதோஷ விரதம்<br>**ஆன்மிகுரு அருள்திரு பங்காரு அடிகளாரின் அவதாரத் திருநாள் பெருவிழா 2019** |
| 12.03.2019 | செவ்வாய் | மாசி | 28 | ஷஷ்டி விரதம் - கொடியேற்றம் - முருகன் ஆலயம் - சிட்னி |
| 12.04.2019 | வெள்ளி | பங்குனி | 29 | **புனருத்தான கும்பாபிஷேகம்**<br>நண்பகல் 12.00 மணி முதல் முற்பகல் 1.00 மணி வரை<br>ஸ்ரீ சிவா-விஷ்ணு ஆலயம் -கரம்டவுண்ஸ் - மெல்பேர்ண் |

## எண்ணம் ஆன்மா இருக்கிறவரை..

**“பணம், வீடு, வாசல், பொன், பொருள் இவற்றைச் சேர்த்து வைத்துப் பந்த பாசத்தோடு வாழ்கிறீர்கள். உயிர் இருக்கும் வரை உடல் நீங்கள் சொல்வதையெல்லாம் கேட்கிறது.**

**காற்றடிக்கும் திசையில் மரம், செடி, கொடி ஆடுவது போல, ஆன்மா இருக்கும் வரை உடல் ஆடுகிறது. நேரம் வரும்பொழுது உடலை விட்டு உயிர் பிரிந்து போய் விகிறது.”**

## ஆன்மா காட்டி விடும்

**“கண்ணாடி முன் நின்றால் உன் முகத்தைக் காட்டி விடும். அதுபோல் ஆன்மா ஒருவனைக் கொலைகாரனா? நல்லவனா? எந்த நோக்கம் உடையவன் என்பதைக் காட்டி விடும்.”**

அன்னையின் அருள்வாக்கு